# சாலைகளை மேம்படுத்த
# ஊராட்சி மன்றங்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும்



கோலாலம்பூர், செப். 18-

பழுதடைந்த சாலைகளைச் செப்பனிடும் பணியில் நாட்டிலுள்ள ஊராட்சி மன்றங்கள் தீவிரம் காட்ட வேண்டும் என நகரத் திட்டமிடல் பிரிவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நாட்டிலுள்ள பல சாலைகளில் குழிகள் ஏற்பட்டுள்ள வேளையில் அவை மோசமான அளவில் பாதிக்கப்படும்போது பொதுப்பணி இலாகாவையே மக்கள் குறைகூறி வருகின்றனர். ஆனால் சில சாலைகள் மாநில, ஊராட்சி மன்றங்களின் பராமரிப்பில் இருந்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தற்போது நாடு முழுவதும் உள்ள 18,117 கிலோ மீட்டர் தூரம் கொண்ட கூட்டரசுச் சாலைகளைப் பராமரிக்கும் முக்கியப் பொறுப்பு பொதுப்பணி இலாகாவுக்கு உள்ளது. இது எளிதான காரியமல்ல எனச் சாலைப் போக்குவரத்து நிபுணரான முகமட் ஸம்ரின் முகமட் அமின் கூறினார்.-

நாட்டில் பல சாலைகள் குழிகள் உட்பட மோசமான நிலையில் சேதமடையும்போது அதுகுறித்து பொதுமக்கள் புகார் கொடுப்பதற்கு முறையான வசதியை அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என அவர் கூறினார்.

பொதுப்பணி இலாகாவைப் போல் நாட்டிலுள்ள ஊராட்சி மன்றங்களும் சாலைகளுக்கு எதிரான புகார்களைக் கொடுப்பதற்கு அவற்றுக்குப் போதுமான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என மாரா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அவர் கூறினார்.

நாட்டிலுள்ள சாலைகள் சீரான முறையில் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அவர், அவர்கள் இதுகுறித்து புகார் கொடுப்பதற்குப் போதுமான வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனவும் முகமட் ஸம்ரின் வலியுறுத்தினார்.

பொதுப்பணித்துறை அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ள மை ஜாலான் செயலியைப்போல் நாட்டிலுள்ள மாநில அரசாங்கங்களும் ஊராட்சி மன்றங்களும் தங்களுக்கென தனிச் செயலிகளை அறிமுகப்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். அதே வேளையில் ஊராட்சி மன்றங்கள் மேற்கண்ட நடவடிக்கைகளில் இறங்குவதற்கு வீடமைப்பு ஊராட்சித்துறை அமைச்சு அதன் எல்லைகளை முறையாக வரையறுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

கோலாலம்பூர் மாநகர் மன்றம், பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்றம், ஷா ஆலம் மாநகர் மன்றங்களைப்போல் நாட்டிலுள்ள இதர மாவட்ட மன்றங்களும் நகராண்மைக்கழகங்களும் ஊராட்சி மன்றங்களும் சாலைப் போக்குவரத்து முறையை சீரான முறையில் நிர்வகிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

சாலைகளில் செயல்படாமல் இருக்கும் சமிக்ஞை விளக்கு, நிலச்சரிவு, வெள்ளம் உட்பட சாலைகளில் ஏற்படும் குழிகள் சேதம் குறித்து புகார் செய்வதற்கு கடந்த ஆண்டு பொதுப்பணித்துறை அமைச்சு மை ஜாலான் செயலியை அறிமுகப்படுத்தியது.

கடந்த ஆண்டு ஆகஸ்டு முதலாம் தேதி முதல் இவ்வாண்டு செப்டம்பர் 6ஆம் தேதி வரை இச்செயலி மூலம் பெறப்பட்ட 18,878 புகார்களுள் 5,857 புகார்களுக்குப் பொதுப்பணி இலாகா உடனடி நடவடிக் கையை எடுத்துள்ளது.